# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



அனுப்புநர்
திரு இரா.சு. மாரியப்பன், B.E., MBA.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்,
51, மேலரதவீதி, தூத்துக்குடி – 2
தொலைபேசி 0461 2322651
மின்னஞ்சல் dtcpttkddistrict@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்
எட்டையபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 810/2022 தூமாஅ–2, நாள் 10.06.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053, வைகாசி 27

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் வட்டம் – எட்டையபுரம் பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் – சர்வே எண் 558/2B1, 2B3, 2B6, 2B8, 2B10, 2B12, 3A2, 3A4, 3A6, 3A8–ல் 15721 சமீ (3.88 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி – ஒப்புதல் வழங்குதல் – குறித்து

பார்வை :
1. மனுதாரர் திரு ஆ. சக்திவேல்முருகன் கடிதம் நாள் 05.04.2022, 25.05.2022 மற்றும் 03.06.2022
2. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 11.05.2022 மற்றும் 30.05.2022
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. எண் 19799/2020 போ, நாள் 24.12.2020
4. அரசாணை எண் 138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.06.2004
5. அரசாணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017
6. இணை இயக்குநர், வேளாண்மைத்துறை கடிதம் ந.க. எண் தி3/10306/2021 நாள் 10.11.2021
7. அரசாணை எண் 18 மற்றும் 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 மற்றும் 31.01.2020
8. அரசாணை எண் 141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23.09.2020
9. அரசாணை எண் 181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 09.12.2020
10. அரசு கடிதம் எண் 19113/நவ4(3)/2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30.08.2017

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 13686/2017 எல்ஏ1, நாள் 08.09.2017
12. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 14.10.2019
13. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் 4367/2019 பிஏ2, நாள் 05.02.2020

--------

பார்வை 1-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் வட்டம், எட்டையபுரம் பேரூராட்சி, எட்டையபுரம் கிராமம், சர்வே எண் 558/2B1, 2B3, 2B6, 2B8, 2B10, 2B12, 3A2, 3A4, 3A6, 3A8-ல் 15721 சமீ (3.88 ஏக்கர்) பரப்பில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள் 11.05.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை 1-ல் சுட்டிய 25.05.2022 நாளிட்ட மனுதாரர் கடிதம் மூலம் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திரம் எண் 1593/2022, நாள் 16.05.2022-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/தூமாஅ எண் 59/2022 என எண்ணிட்டு 3 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானபத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணைக்கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்**

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு

விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகாரபத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

2. (a) பார்வை 9–ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7–ல் கண்ட TNCDBR 2019 விதி எண் 47(1)–ன் படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the changes for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant directly.
3. (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permits of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm warm drams, water supply facilities by constructing required OHT, provide necessary street lights, etc., as per the standards specified by the local body".
4. (EWS) பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண் 18. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 31.01.2020–ன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
5. பார்வை 10 மற்றும் 11–ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
6. "The Tamil Nadu Government in G.O. (Ms) No. 112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act, 2016). The Promoter has to advertise, market, book, sell or offer for sale, are invite person to purchase in any manner, any

plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate project with the Real Estate Regulatory Authority–ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7. பார்வை 5–ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லாத பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் விதி எண் 3–ன் படி மனை ஒன்றுக்கு ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்)–த்தை திரும்ப பெறமுடியாத கூராய்வு கட்டணத் தொகையையும் மற்றும் விதி எண் 9–ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாகவும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் வசூல் செய்த பிறகே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
8. பார்வை 4 மற்றும் 7–ல் காணும் அரசாணைகளின் படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.29700/– (ரூபாய் இருபத்து ஒன்பதாயிரத்து எழுநூறு மட்டும்) அரசு கணக்கில் 03.06.2022–ல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.
9. தங்களால் அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் தவறு என உறுதி செய்யப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி மனைப்பிரிவு ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
10. This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P. (MD) No. 8948 of 2019

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி – 2

10/6/2022

இணைப்பு
வரைபடம் 3 தொகுப்பு, மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் அசல் தானபத்திரம்

நகல்

1. திரு ஆ. சக்திவேல்முருகன், 4–81ஹெச்4, லட்சுமிமில் மேலக்காலனி, கோவில்பட்டி – 628 502 — பத்தி ஒன்று மட்டும்
2. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி மாவட்டம்
3. வட்டாட்சியர், எட்டையபுரம், தூத்துக்குடி மாவட்டம்
4. செயலாளர் (திட்டம்), தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் (TNRERA), 1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு முதல்தளம், எழும்பூர், சென்னை
5. இருப்பு கோப்பு (வரைபடம் 1 மற்றும் நிபந்தனைகள் படிவம்–1)

தமிழ்நாடு அரசு
நகர் ஊரமைப்புத் துறை
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி – 2.

கோப்பு எண்: 810/2022 தூமாஅ-2

மனைப்பிரிவு : ம.வ/தூமாஅ எண் 59/2022 உள்ளாட்சி : எட்டையபுரம் பேரூராட்சி

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன்ஒப்புதலின்றிச் செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும், பொதுக் காரணங்களுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர, குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும், மனை உபயோக மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR 2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

5. மனையின் ஊடே குறைந்த அழுத்த/உயர் அழுத்த மின்கம்பிப் பாதை/தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதி தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

7. 7.2மீ. அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.0மீ. தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.0மீ.-க்குள் வளர்க்கப்பட வேண்டும்.

8. மனைப்பிரிவில் அமையும் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

9. (அ) மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு (Planning Permission / Concurrence) மட்டுமே வழங்கப்பட்டு உள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின், உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)மேற்படி மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொதுத் திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தரத் தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும், மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் தெளிவாகக் குறிப்பிட்டு நிரந்தரமாகப் பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Perimission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத் துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

## அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

| விபரம் | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 15721 ச.மீ (3.88 ஏக்கர்) | |
| ஒதுக்கிய மனைகள் | : | 99 | |
| பொது ஒதுக்கீடு (மனுதாரரால் உள்ளாட்சிக்குத் தானமாக ஒப்படைக்கப்பட்டது) | | | |
| பூங்கா | : | 1452.06 ச.மீ. | (10.09%) |
| உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் | : | | |
| உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு | : | 89.60 சமீ | (0.62%) |
| தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான ஒதுக்கீடு | : | 73.87 சமீ | (0.51%) |
| விற்பனைக்குரியவை | | | |
| EWS மனைகளின் பரப்பு | : | 1512 சமீ | (10.52%) |
| மனை எண்கள் | : | 47 to 60, 73 to 86 | |

நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தூத்துக்குடி – 2.

**எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திரு.கு.கணேசன்**

**ந.க.எண். 57/2022/அ1** **நாள்.15.07.2022**

**பொருள் :** **மனைப்பிரிவு ஒப்புதல் – தூத்துக்குடி மாவட்டம் – எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி – எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 558/2B1,2B3,2B6, 2B8, 2B10, 2B12, 3A2,3A4, 3A6, 3A8 ல் 15721 ச.மீ (3.88 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்களுக்கு அனுமதி வழங்கியது – பத்திரம் பதிவு செய்ய தடையின்மை சான்று மற்றும் ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.**

**பார்வை :** 1) தூத்துக்குடி மாவட்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண். 810/2022/தூமாஅ–2 நாள் 10.06.2022

2) எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற முன் அனுமதி நாள்.15.07.2022

3) தொடர்புடைய ஆவணங்கள்.

* * * * * * * * *

பார்வை (1) ல் காணும் தூத்துக்குடி மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களின் கடிதத்தின்படி , எட்டையபுரம் பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண். 558/2B1,2B3,2B6, 2B8, 2B10, 2B12, 3A2,3A4, 3A6, 3A8 ல் 15721 ச.மீ (3.88 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ /தூமாஅ எண்.59/2022** ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 99 வரை உள்ள மனைகளுக்கான சாலைகள்1351.46 ச.மீ மற்றும் உள்ளாட்சியின் பயன்பாட்டிற்கு 89.60 ச.மீ, கொண்ட இடம் எட்டையபுரம் சார்பதிவாளர் அலுவலக பதிவு ஆவண எண்.485/2022 நாள்.16.02.2022 மற்றும் 1593/2022 நாள்.16.05.2022 ன்படி எட்டையபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள 99 மனைகளுக்கு சுவராய்வு கட்டணம் மற்றும் நாளது தேதியில் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டு தொகையில் 3 சதவீதம் கட்டணம் உட்பட தொகை ரூ.1,53,719/– ( ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து எழுநூற்றி பத்தென்பது மட்டும் ) எட்டையபுரம் கிளை கனரா வங்கி வரைவோலை எண்.659084 நாள்.13.07.2022 மற்றும் அடிப்படை வசதி கட்டணமாக ரூ.14,32,000/–( ரூபாய் பதினான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும் ) எட்டையபுரம் கிளை கனரா வங்கி வரைவோலை எண்.659083 நாள்.13.07.2022 ன்படி எட்டையபுரம் பேரூராட்சிக்கு வரவாக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை (2) ல் காணும் விபரப்படி எட்டையபுரம் பேரூராட்சி மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எட்டையபுரம் தேர்வுநிலை பேரூராட்சி எட்டையபுரம் கிராமம் சர்வே எண் 558/2B1,2B3,2B6, 2B8, 2B10, 2B12, 3A2,3A4, 3A6, 3A8 ல் 15721 ச.மீ (3.88 ஏக்கர்)பரப்பளவு கொண்ட இடத்தில் அமைந்துள்ள 1 முதல் 99 வரையிலான 99 குடியிருப்பு மனைகளை பத்திரப்பதிவு செய்து கொள்ள தடையின்மை சான்று வழங்கப்படுவதுடன் கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 99 குடியிருப்பு மனைகளுக்கு இதன் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(51)

**<u>நிபந்தனைகள்:</u>**

1) தாங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வுத்தரவு வழங்கப்படுகிறது. இதில் ஏதேனும் தவறுகள் / முறைகேடுகள் என பின்னர் தெரியவந்தால் இவ்வுத்தரவு முன்தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
2) இந்த மனைப்பிரிவில் கட்டிடம் கட்டப்படும் நேர்வில் உரிய கட்டிட உரிமம்/அனுமதி உரிய கட்டணங்கள் செலுத்தி பேரூராட்சியில் தனியே பெறப்படவேண்டும். மேலும் காலியிடவரி உரிய தேதியில் செலுத்தப்படவேண்டும்.
3) மனைப்பிரிவு/மனையிடம் முறைப்படுத்தியது சம்பந்தமாக நீதிமன்றத்தின் மூலம் தாவா வரப்பெற்றால் இந்த அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்ட அனைத்து உத்திரவுகளும் மற்றும் இரசீதுகளும் ரத்து செய்யப்படும்.
4) இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட கட்டணங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு உட்பட்டதாகும்.உள்ளாட்சி நிதித்தணிக்கையில் இழப்பு தொகை எதுவும் குறிப்பிடப்பட்டால் மனுதாரரே செலுத்த வேண்டும்.
5) விண்ணப்பதாரர் உண்மைக்கு புறம்பாக ஆவணங்களை இணைத்து முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்தியிருந்தால் இவ்வுத்திரவு பொருந்தாது.
6) இவ்வுத்திரவு குறித்து ஏதேனும் புகார் வரப்பெற்று தக்க ஆதாரங்களுடன் நிரூபணமானால் இந்த உத்திரவு மற்றும் செலுத்தப்பட்ட தொகை ரத்தாகும்.
7) அரசு ஆணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்.04.05.2017-ல் கண்டுள்ள நெறிமுறைக்கு உட்பட்டது. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் தவறுகள் / முறைகேடுகள் இருப்பின் உத்திரவு முன் தேதியிட்டு இரத்து செய்யப்படும்.
8) தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர் (பொ)அவர்களின் கடிதம் **ந.க.எண்.810/2022/தூமாஅ-2 நாள் 10.06.2022ன்** நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
9) நீரோடைகள்/நீர்நிலைகள், ஆக்கிரமிப்பு, உயர்மின் அழுத்த மின் பாதைகளின் கீழ் மனைகள் அமைக்கப்பட்ட மனைக்கு இவ்வுத்திரவு பொருந்தாது.
10) பொது இடம், சாலைகள் ஆக்கிரமிப்பு இருப்பின் அவ்விடத்திற்கு இவ்வுத்தரவு பொருந்தாது.
11) மேற்படி மனை பழைய வார்டு எண் 11 புதிய வார்டு எண்.6 ல் அலங்காரியம்மன் கோவில் தெருவுடன் இணைந்துள்ளது.

செயல் அலுவலர் 15/7/22
எட்டையாபுரம் பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

15/7/22

**<u>பெறுநர்</u>**

திரு.ஆ.சக்திவேல்முருகன்,
4-81ஹெச்4, லட்சுமி மில்,
மேலக்காலனி.
கோவில்பட்டி - 628 502.

**<u>நகல்</u>**

1) துணை இயக்குநர் (பொ) அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, தூத்துக்குடி மாவட்டம்.
2) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், எட்டையபுரம்.
3) கோப்புக்கு



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate